# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்:
# தமிழ்நாட்டின் மற்றுமொரு முன்னுதாரணத் திட்டம்!

“பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ? கூறுமின் எமக்கே”
- புறநானூறு 173

சென்னையில் ஒரு நிகழ்ச்சி. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சி அது. அப்போது குழந்தைகள் சிலருடன் அவர் உரையாடியபோது அவர்களில் சிலர் களைப்புடனும் சோர்வாகவும் இருப்பதைப் பார்க்கிறார். தாயுள்ளத்தோடு அக்கறையுடன் அவர்களிடம் விசாரிக்கிறார். அப்போது, மாணவர்களில் பலரும் காலையில் உண்பதில்லை என்றும், பசியோடுதான் அவர்கள் பள்ளிக்குச் செல்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டு அதிர்ந்துபோகிறார். அதன் பிறகு, அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து உடனடியாகக் காலை வேளையில் உணவளிக்கும் திட்டத்தைத் தொடங்கியாக வேண்டும் என உத்தரவிடுகிறார். அப்படித்தான் இந்த மகத்தான காலை உணவுத் திட்டம் துரிதமாக நடைமுறைக்கு வந்தது. ஏற்கெனவே இதற்கு முன்பாக வெவ்வேறு காலகட்டங்களில் இதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தாலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில்தான் அது செயல்வடிவம் பெற்றிருக்கிறது.

பள்ளிக்கு வரும் பிள்ளைகளுக்குப் பசியோடு பாடம் கற்றுக்கொடுக்கக் கூடாது என்று எண்ணியதாலேயே காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடும் தமிழ்நாடு முதலமைச்சர், இத்தகைய திட்டங்களை இலவசம் என்றோ தர்மம் என்றோ தானம் என்றோ யாரும் நினைக்கக் கூடாது என்றார். இது ஒரு அரசின் கடமையும் பொறுப்புமாக அமைந்திருக்கிறது என்றதோடு, உங்கள் வீட்டுப் பிள்ளை களுக்கு எவ்வாறு கனிவோடும் அக்கறையோடும் உணவு வழங்குகிறீர்களோ, அதைவிடக் கூடுதல் கவனத்தோடும் கனிவோடும் உணவு வழங்க வேண்டும் என்று ஆசிரியர்களையும் அதிகாரிகளையும் பணியாளர்களையும் கேட்டுக்கொண்டார். “அன்பு மாணவச் செல்வங்களே, உங்களுக்குக் காலையும் மதியமும் உணவு வழங்குகிறோம். நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள் படியுங்கள் படியுங்கள். நீங்கள் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்துங்கள் என்று வேண்டிக்கொண்டார். எந்தச் சூழ்நிலையிலும் எந்தக் காரணத்திற்காகவும் கல்வியை விட்டுவிடா தீர்கள்” என்று உத்வேகம் அளித்தார் முதலமைச்சர். “விலகிச்செல்ல நான் விட மாட்டேன்” என்று உறுதியளித்தார்!

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் நான் வாடினேன் என்று பாடிய இராமலிங்க வள்ளலார் வாழ்ந்து மறைந்த மாநிலம் தமிழ்நாடு. இங்கே பசியுடன் எவராவது இருப்பதைத் தனிமனிதரே தாங்கிக்கொள்ள மாட்டார் எனும்போது, ஓர் அரசாலோ அதன் முதலமைச்சராலோ சகித்திருக்க முடியுமோ? அதுவும் பிஞ்சுக் குழந்தைகள் பசி நோயால் வாடுவது கண்டு வாளாயிருக்கக்கூடுமோ? இப்படியான உயரிய சிந்தனையில், குழந்தைகளின் பசி தீர்க்க தமிழ்நாட்டில் உருவான திட்டம்தான் மதிய உணவுத் திட்டம். அது தமிழ்நாட்டில் உருவாக்கிய கல்விப் புரட்சி அளப்பரியது. இந்தியாவே வியந்துபார்க்கும் திட்டமாக அது உருப்பெற்றது. அதன் நீட்சியாக, தற்போது தமிழ்நாட்டில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. மீண்டும் இந்தியாவுக்கே வழிகாட்டும் முன்மாதிரி மாநிலமாகியிருக்கிறது தமிழ்நாடு.

கல்வி கற்பதற்குப் பசி ஒரு தடையாக இருந்துவிடல் ஆகாது என்னும் காரணத்தாலேயே இந்த மனிதநேயமிகு திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இந்தத் திட்டம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன் கீழ் 2022 மே 7 அன்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்துக்கான அரசாணையை (அரசாணை எண்: 43, நாள்: 27.07.2022) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை வெளியிட்டது.

**ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி**

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஒரு நீண்ட வரலாற்றையும் பண்பாட்டுத் தொடர்ச்சியையும் கொண்டுள்ளது. முதலில், பள்ளிப் பிள்ளைகளுக்குக் கல்வியுடன் சேர்த்து உணவும் வழங்க வேண்டுமென்ற ஓர் உன்னதமான நோக்கத்தை வெளிப்படுத்தியவர் பண்டித அயோத்திதாசர் அவர்கள். அவரது பௌத்த சிந்தனையில் அது உதித்தது. 1900களின் தொடக்க காலத்தில் பஞ்சமர்களுக்காகத் தொடங்கிய கர்னல் ஆல்காட் பள்ளிகளில் மதிய உணவு வழங்க வேண்டும் என்ற சிந்தனைக்கு வித்திட்டார் பண்டித அயோத்திதாசர் அவர்கள்.

அதன் பின்னர், சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர் சர். பிட்டி. தியாகராயர் தலைமையில் நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக 16.9.1920 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மதிய உணவுத் திட்டம் சென்னை, ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயிரம் விளக்குப் பகுதியின் மாநகராட்சிப் பள்ளியில் முதலில் காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதனால் ஓராண்டுக்குள் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 3075இலிருந்து 3705 ஆக அதிகரித்தது. இந்தத் தகவலை முனைவர் பி. சரசு தனது ‘வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும்’ என்னும் நூலில் குறிப்பிடுகிறார். பின்னர் இது மீர்சாகிப் பேட்டை, சேத்துப்பட்டு உள்ளிட்ட இடங்களில் உள்ள நான்கு பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. பின்னர் இது ஓரப்பாளையம், கொக்ரனே, பேசின் ஆகிய பகுதிகளின் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட ஐந்து பள்ளிகளின் ஒட்டுமொத்த மாணவர் சேர்க்கை 1922-23 ஆம் ஆண்டில் 811 ஆக இருந்தது. இது 1925-26ஆம் ஆண்டில் 1671 ஆக அதிகரித்தது. மதிய உணவுத் திட்டத்தின் பயனால் மாணவர் சேர்க்கை அதிகரித்தது. ஒரு நாளைக்கு ஒரு மாணவருக்கு ஒரு அணாவுக்கு மிகாமல் செலவழிக்கப்பட்டது.

நீதிக்கட்சி காலத்தில் 1922 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம் 1925 ஆம் ஆண்டு 500 மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 1947 மார்ச் 3 அன்று அரசு வெளியிட்ட அரசாணை எண். 386இல் மாகாணத்தின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு மதிய உணவுத் திட்டத்தைத் தொடர முடியாத நிலை இருப்பதால் 1947 ஏப்ரல் 1 அன்று முதல் மதிய உணவுத் திட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. 1947இல் போதிய நிதி ஆதாரங்கள் இல்லை என்ற காரணத்தால் மதிய உணவு நிறுத்தப்பட்டபோதும், ஹரிஜன நலத் துறைப் பள்ளிகளில் அத்திட்டம் தொடர்ந்து இயங்கிவந்துள்ளது.

1957இல் அப்போதைய முதலமைச்சர் கு.காமராஜ் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை மீண்டும் தொடங்கினார். அவரால், தொடக்கக் கல்வி பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு குழந்தைக்கு ஆண்டுக்கு ரூ.18க்கு மிகாமல், இத்திட்டத்தைச் செயல்படுத்த பத்து லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பின்னர், மதிய உணவுத் திட்டம் சத்துணவுத் திட்டமானது. மதிய உணவுத் திட்டம் பள்ளிகளில் பயின்றுவந்த மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கே பயனளித்துவந்தது; ஆண்டுக்கு 200 நாள்களுக்கு மட்டுமே உணவளிக்கப்பட்டது. ஆனால், சத்துணவுத் திட்டம் ஆண்டு முழுவதும் பள்ளி மாணவர் அனைவருக்கும் உணவளித்தது. 1982 ஜூலை மாதத்தில் அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் 2 முதல் 5 வயதுவரை உள்ள முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கும், 5 முதல் 9 வயதுவரை உள்ள தொடக்கக் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கும் சத்துணவு வழங்கப்படும் என அறிவித்தார். திருச்சிராப்பள்ளி மாவட்டம் பாப்பாகுறிச்சியில் 01.07.1982 அன்று சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. முதலில் கிராமப்புற மாணவருக்கு வழங்கப்பட்டாலும், செப்டம்பர் 1984 முதல் நகர்ப்புறங்களுக்கும் பத்தாம் வகுப்புவரை பயிலும் மாணவருக்கும் விரிவுபடுத்தப் பட்டது. சத்துணவுத் திட்டத்தால் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையும் வருகைப்பதிவும் குறிப்பிட த்தக்க அளவில் அதிகரித்தன.

1989இல் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்கள் சத்துணவுடன் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கப்படும் என அறிவித்து நடைமுறைப்படுத்தினார். 1998இல் வாரந்தோறும் ஒரு முட்டை வழங்கப்பட்டது. 2006 ஜூலை 15 அன்று வாரந்தோறும் இரண்டு முட்டை வழங்கப்படும் திட்டம் தொடங்கப்பட்டது. 2006இல் வாரந்தோறும் இரண்டு முட்டைகள் வழங்கப்பட்டன. 15.07.2007 அன்று முதல் வாரம்தோறும் மூன்று முட்டைகள் வழங்கப்பட்டன. 15.07.2008 அன்று முதல் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்பட்டன. 2010 முதல் வாரந்தோறும் ஐந்து முட்டைகள் வழங்கப்படுகின்றன.

**பள்ளிக் கல்வியில் ஒரு மாபெரும் புரட்சி**

இதன் நீட்சியே தற்போதைய முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ‘ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை / மாற்றுவார் ஆற்றலின் பின்’ என்ற வள்ளுவரின் வாக்குக்கு முன்னுதாரணமாகத் திகழும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன் கீழ், தொடக்கப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு அனைத்துப் பள்ளி நாள்களிலும் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என அறிவித்தார். முதலில் இத்திட்டம் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளிலும் தொலைதூரக் கிராமங்களில் உள்ள பள்ளிகளிலும் தொடங்கப்படும் என்றும் பின்னர் படிப்படியாக அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் அறிவித்தார். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தைச் சொன்னபடி செய்துகாட்டியிருக்கிறார்.

இத்திட்டம் மொத்தம் 1,545 பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் 1,14,095 மாணவ மாணவியருக்குச் சத்தான சிற்றுண்டி வழங்க வழிவகுக்கப்பட்டது. இந்தத் திட்டத்து க்காக ரூ. 33.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது மாநிலம் முழுவதும் உள்ள 31,000 அரசுப் பள்ளிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கம் பெற்றுள்ளது. இதுவரை 1.14 லட்சம் மாணவ மாணவிகள் பயன்பெற்றுவந்த நிலையில் இனி இந்தத் திட்டத்தால் 17 லட்சம் பயன் பெறுவர்.

திட்டம் எப்படி செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், குழந்தைகளுக்கு என்னென்ன உணவு வகைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் சிறப்புக் கவனம் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளுக்கும் என்னென்ன உணவு வகைகள் வழங்கப்படலாம் என ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டது. அதிலுள்ள உணவு வகைகளையே மாணவ மாணவியருக்கு வழங்க வேண்டும். ரவா உப்புமா, அரிசி உப்புமா, சேமியா உப்புமா, வெண் பொங்கல், ரவா பொங்கல், கோதுமை ரவா உப்புமா, காய்கறிச் சாம்பார் போன்ற உணவு வகைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. வெள்ளிக்கிழமை அன்று ரவா கேசரி, சேமியா கேசரி போன்ற இனிப்பும் பரிந்துரைக்கப்பட்டன. ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு 50 கிராம் அளவில் ரவை, கோதுமை, அரிசி, சிறுதானியங்கள் போன்ற தானியமும், 15 கிராம் பருப்பும் உள்ளூரில் கிடைக்கும் காய்கறிகளும் வழங்கப்படுகின்றன. சமைத்த உணவு 150 முதல் 200 கிராம் வரையிலும், 60 கிராம் காய்கறியுடன் கூடிய சாம்பாரும் வழங்கப்படுகின்றன.

தரமான உணவுப் பொருள்களைக் கொண்டு சுத்தமான முறையில் உணவு சமைக்கப்பட்டு வழங்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. சமைக்கப்பட்ட உணவைப் பள்ளி மேலாண்மைக் குழு ருசிபார்த்த பின்னரே மாணவருக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. மாநில, மாவட்ட, பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இத்திட்டம் கண்காணிக்கப்படுகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் 115ஆவது பிறந்தநாளான 2022 செப்டம்பர் 15 அன்று மதுரை சிம்மக்கல், ஆதிமூலம் ஆரம்பப் பள்ளி எண்:2 என்னும் மாநகராட்சித் தொடக்கப் பள்ளியில் தொடங்கிவைத்தார். மாணவர்களுடன் அமர்ந்து காலை உணவை உண்டார். ரவா கிச்சடி, ரவா கேசரி, காய்கறிச் சாம்பார் ஆகியவை பரிமாறப்பட்டன.

அந்தப் பள்ளியின் குறிப்பேட்டில், “திராவிட மாடல் ஆட்சியாகச் செயல்படும் நமது ஆட்சியில் இன்று தொடங்கியுள்ள முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வெற்றிபெற வாழ்த்துகள்” என்ற வாழ்த்துச் செய்தி ஒன்றையும் எழுதியுள்ளார். பின்னர் உரையாற்றிய முதலமைச்சர், “வாழ்விலே பொன்னாள் என்று சொல்லத்தக்க அளவிலே இந்நாள் அமைந்திருக்கிறது. பசித்த வயிறுகளுக்கு உணவாக, தவித்த வாய்க்குத் தண்ணீராக, திக்கற்றவர்க ளுக்குத் திசைகாட்டி களாக, யாருமற்றவர்களுக்கு ஆறுதலாக இருக்கப்போகும் கருணை வடிவமான திட்டம்தான் இந்தக் காலை உணவு வழங்கக்கூடிய திட்டம். தமிழ்நாட்டுப் பிள்ளைகள் பசியால் வாடக் கூடாது என்று நினைக்கிறோம். அதனால்தான் இந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்கியிருக்கிறோம்” என்று குறிப்பிட்டார்.

பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவோடு காலை உணவையும் வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை பரிந்துரைத்துள்ளது. அந்தக் கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு ஏற்றுக்கொண்டு ஆண்டுகள் உருண்டோடிக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசு இன்னும் முயற்சி மேற்கொள்ளவே இல்லை. தமிழ்நாடு அரசோ அந்தத் திட்டத்தை அடுத்தடுத்து வெவ்வேறு கட்டங்களாகச் செயல்படுத்தியதோடு தற்போது மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தியும் உள்ளது.

**தொலைநோக்குப் பார்வை கொண்ட மகத்தான திட்டம்**

ஓமன் நாட்டில் வங்கி அதிகாரியாகப் பணிபுரியும் சுந்தர், ”பள்ளியில் படித்த காலத்தில் தமிழ்நாடு அரசின் மதிய உணவை சாப்பிட்டுத்தான் படித்தேன். திருவையாறு பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் படித்த நாள்கள் மறக்க முடியாத நினைவுகள். நானும் எனது அண்ணனும் எங்கள் குடும்பத்தில் முதல் தலைமுறை பட்டதாரிகள்” என்கிறார். அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் வங்கி அதிகாரியாகப் பணிபுரியும் சொர்ணம் சங்கரபாண்டியும், தான் தென்கோடியில் கடலோரச் சிற்றூரில் படித்ததையும், அப்போது தனது கல்வி தொடர்வதற்கு மதிய உணவுத் திட்டம் மிக முக்கியக் காரணமாக இருந்தது என்பதையும் குறிப்பிடுகிறார்.

மதிய உணவுத் திட்டத்தால் தானும் தன் சகோதரியும் பயனடைந்ததாகக் குறிப்பிடு கிறார் அமெரிக்காவின் சான் ஹோஸ் நகரில் வசிக்கும் க. தில்லைக் குமரன். சென்னை மாநகராட்சிப் பள்ளியில் பயின்று கோவை தொழில்நுட்பக் கல்லூரியில் எலெக்ட்ரானிக்ஸ் படித்துவிட்டு அமெரிக்காவில் குடியேறிய கனகராஜன் நடராஜன், “அன்று என் பசியை தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டம் போக்கியிருக்கவில்லை என்றால் இன்று அமெரிக்காவிலிருந்து மேக்புக் மடிக்கணினியில் இதை எழுதியிருப்பேனா என்பது சந்தேகமே” என்று சொல்கிறார்.

இன்று மிக உயரிய நிலையில் இருக்கும் இவர்களைப் போன்ற ஏராளமானவர்களின் ஏற்றத்துக்குக் காரணமாகத் தமிழ்நாடு அரசின் சமூக நலத் திட்டங்கள் இருந்திருக்கின்றன. இப்போது விரிவு பெற்றி ருக்கும் காலை உணவுத் திட்டம் அப்படிப் பலருடைய வாழ்க்கையிலும் ஒளியேற்றும் உன்னதத் திட்டமாக இருக்கும் என்பதில் எவ்விதம் ஐயமும் இல்லை.

காலை உணவுத் திட்டம் முதன்மையாக மாணவ மாணவியர் பசியின்றிப் பள்ளிக்கு வருவதை உறுதிசெய்கிறது. அடுத்ததாக, மாணவ மாணவியரின் பள்ளி வருகையை அதிகரிப்பதோடு, அதைத் தக்கவைத்துக்கொள்ளவும் உதவுகிறது. மேலும், இந்தக் காலை உணவுத் திட்டத்தின் மறைமுக பலனாகப் பலவற்றையும் குறிப்பிடுகிறார்கள் வல்லுநர்கள். பசியைப் போக்குவதோடு ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தவிர்ப்பது, குழந்தைகளின் சராசரி உயரத்தை எட்டுவது, வளரிளம் பருவத்தினரின் உடல் எடைக் குறைபாட்டைத் தவிர்ப்பது, ரத்தசோகை ஏற்படாமல் பார்த்துக்கொள்வது, வைட்டமின் பி12 குறைபாடு ஏற்படாமல் தவிர்ப்பது இவையெல்லாம் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

மாணவ-மாணவியர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதும், ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதும், ரத்தசோகைக் குறைபாட்டை நீக்குவதும் இந்தத் திட்டத்தின் முக்கியமான குறிக்கோள்களாகும். ஊட்டச்சத்துக் குறைபாட்டோடு இருப்பவர்கள்தான் நோய்களின் தாக்குதலுக்கும் முதல் பலியாகக்கூடியவர்கள் என்பதைப் பார்த்தோம் என்றால் இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் புலப்படும். ஆரோக்கியமான எதிர்காலச் சமூகத்தைக் கட்டமைக்கும் உயரிய நோக்கில் தமிழ்நாடு அரசு முன்னெடுத்துவரும் பல்வேறு நலத்திட்டங்களின் பகுதியாகவும் இந்தக் காலை உணவுத் திட்டத்தைப் பார்க்க வேண்டும். இவையெல்லாம் போக, வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைப்பதும் இதன் முதன்மையான நோக்கமாக இருக்கிறது. பிள்ளைகளின் உடல்நலன் மேம்படுவதோடு குடும்பத்தின் மனநலனும் இதனால் மேம்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நாளைய வளமான வாழ்வுக்கான அடித்தளமாகும். இந்தத் திட்டத்தால், மாணவர்களின் கற்றல் திறன் மேம்படும். உடல்நலன் உறுதிப்படும். பிணியற்ற ஆரோக்கியமான மாணவச் சமுதாயம் உருவாகும். மிக கவனமாகப் பார்த்தோம் என்றால், இந்தத் திட்டமானது சமூகநீதியை அடிநாதமாகக் கொண்டிருப்பது புலப்படும். மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்; உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என மணிமேகலை காட்டும் வழியில் மானுட அறம் போற்றும் மகத்தான முதலமைச்சர்!

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வரும் படம்!



இஸ்ரோ சந்திராயன் 3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் அவர்களின் வீட்டில் நுழைந்ததும் பார்த்த முதல் படம்...

## தமிழ்நாடு அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கு
## தாயுமானவனாகத் திகழ்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!
### பொதுமக்கள் நெகிழ்ச்சி!

**முதலமைச்சர் காலை உணவுத்திட்டம் விரிவாக்க நிகழ்ச்சி பற்றிய குறிப்பு:**

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்’ தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தி 31008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 லட்சம் அரசுப்பள்ளி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் நிகழ்ச்சியை நேற்று காலை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

பள்ளி மாணாக்கர்கள் உட்பட சுமார் 400/250 பேர் கலந்துகொண்டனர்.

திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களோடு தரையில் அமர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணவு அருந்தியது மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படித்த பள்ளியிலிருந்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டது திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மக்களிடையே கூடுதல் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணாக்கர்களோடு எளிமையாகப் பேசியும், உணவு பரிமாறிய நிகழ்ச்சிகள் அனைத்து தரப்பினர் மத்தியிலும் நெகிழ்ச்சியுடன் கூடிய வரவேற்பை உருவாக்கியுள்ளது.

பள்ளி மாணவர்களோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணவு அருந்திய காட்சியைப் பார்ப்பதற்கு பெற்றோர்கள் மிகுந்த ஆர்வமுடன் இருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது “தாய் உள்ளத்தோடு இத்திட்டத்தை தொடங்கியுள்ளோம். எல்லோருடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கிறேன். பள்ளி மாணாக்கர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உயிர் கொடுக்கும் அரசாக திராவிட மாடல் அரசு உள்ளது” என்றவாறு உருக்கமாகப் பேசிய கருத்துக்கள், அனைவரிடையேயும் நல்ல வரவேற்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணாக்கர்கள், பெற்றோர்கள் மத்தியில் இத்திட்டம் பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான மக்கள் வேலைக்குச் செல்லக்கூடியவர்கள் என்ற நிலையில், தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தங்கள் குழந்தைகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருப்பதாக நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட மக்களிடையே பேசப்படுகிறது.

காலையில் பள்ளிக்குழந்தைகள் சாப்பிடாமல் சென்ற சூழல் தற்போது மாற்றப்பட்டு ‘காலை உணவுத்திட்டம்’ பெரிய பயனை ஏற்படுத்தியுள்ளது இந்நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மத்தியில் பேசப்பட்டது.

தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வரவேற்பு சென்னையில் பெரும்பாலும் வீடுகளை இழந்துள்ள குடும்பத்தினர், பிளாட்பாரத்தில் கடைகளை நடத்தும் குடும்பத்தினரது பள்ளி மாணாக்கர்கள் மத்தியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தால் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதுடன், அவர்களது பெற்றோர்கள் தெரிவிக்கையில், “இது தமிழ்நாடு அரசின் ஒரு மைல் கல் திட்டம், இத்திட்டம் அரசாங்கத்திற்கு மிகுந்த கூடுதல் வரவேற்பை ஏற்படுத்தும்” எனத் தெரிவிக்கின்றனர்.

மதுரை மாவட்டத்தில் ரிக்சா ஓட்டுநர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் என பலதரப்பட்ட மக்கள் மத்தியில் இத்திட்டத்திற்கு மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தியிருப்பதாக ரிக்சா ஓட்டுநர்கள் உள்ளிட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

கோவையில் இத்திட்டம் தொடங்கப்பட்டபோது வடை, பொங்கல், இட்லி போன்றவை வழங்கப்பட்டது மாணாக்கர்கள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெற்றோர்கள் மத்தியில் இத்திட்டம் மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை, திருப்பூர், கோவை, கன்னியாகுமரி உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களில் உள்ள கிராம மற்றும் நகர்ப்புற பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மத்தியில் இத்திட்டம் தமிழ்நாடு அரசுக்கு பெரும் வரவேற்பை ஏற்படுத்தி வருவதாகத் தெரிகிறது.

விடியல் பயணம் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கானபுதுமைப்பெண் திட்டத்தைத் தொடர்ந்து காலை உணவு திட்டம் மூலம் முதலமைச்சர் மூன்றாவது சிக்ஸர் அடித்துள்ளார் என கருத்து தெரிவித்தனர்.

முதலமைச்சர் தனது உரையில் மதிய உணவுத் திட்டத்தில் முன்னாள் முதலமைச்சர்களான எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் பங்களிப்பையும் குறிப்பிட்டது அனைத்து தரப்பினரின் வரவேற்பைப் பெற்றது.

கல்வி கற்பதற்கு கட்டை விரலைக் கேட்கும் சனாதனத்திலிருந்து விலகி காலை மற்றும் மதிய உணவு வழங்கும் சமூகநீதி திராவிட மாடல் ஆட்சி என குறிப்பிட்டது பெரும் வரவேற்பைப் பெற்றது.

‘இது துரோகாச்சாரியார்கள் காலம் அல்ல’ இது ஏகலைவன் காலம் என குறிப்பிட்டது எழுச்சியாக இருந்தது.

‘படிப்பு மட்டுமே பறிக்க முடியாத சொத்து. படிப்பை நீங்கள் பாருங்கள் மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்’ என கூறியது பெரும் நம்பிக்கையை அளித்தது.

‘தமிழ்நாடு அரசுப்பள்ளி குழந்தைகளுக்கு தாயுமானவனாக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்கிறார் என்பதில் ஐயமில்லை’ என அனைத்து தரப்பு மக்களும் கருத்து தெரிவித்தனர்.